

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் கலைஞர் திடலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெறும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மின்னொளி கபாடி போட்டியினை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளருமான, கனிமொழி கருணாநிதி எம்.பி. தொடங்கி வைத்தார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில நெசவாளர் அணி துணை அமைப்பாளர் வசந்தம் ஜெயக்குமார், ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்ன மாரிமுத்து, ராதாகிருஷ்ணன், செல்வராஜ், மும்மூர்த்தி, அன்புராஜன், காசி விஸ்வநாதன், நவநீதகண்ணன், விளாத்திகுளம் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மணிமாறன் தலைமை! கழகத் தலைவர் – முதல்வர் பிறந்த நாள் விழா!

# மயிலம் வடக்கு ஒன்றியத்தில் 1000 பேருக்கு நல உதவிகள் - பொதுக்கூட்டம்!

## தலைமைக் கழகப் பேச்சாளர் தமிழ்தாசன் – செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை!

மைலம், மார்ச் 7 -

மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ரெட்டனையில்நடைபெற்ற கழகத் தலைவர் முதல்வர் மு.க .ஸ்டாலின் 72 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கழக அரசின் சாதனை விளக்கபொது க் கூட்டத்தில் கழகத் தீர்மான குழுத் தலைவர், தலைமை கழக பேச்சாளர் தமிழ் தாசன், விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றிஆயிரம் நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதி மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு கழக அரசின் சாதனை விளக்க பொதுக் கூட்டம்மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ரெட்டணை அண்ணா திடலில்நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் தலைமை தாங்கினார் .ஒன்றிய குழு உறுப்பினர் ராஜ் பரத் அனைவரையும் வரவேற்றார். நிர்வாகிகள் குமுதா ரமேஷ், ஏழுமலை, ரவிச்சந்திரன், குமார், சிங்காரம், ஆர் .எஸ். சுப்பிரமணி, கன்னியப்பன்,பழனி,நாராயணன், சந்திரன், ராஜ்குமார், தயாளன், அருள். கமலக்கண்ணன், அண்ணா துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கழகத் தீர்மானக் குழு தலைவரும், தலைமைக் கழக பேச்சாளருமான தமிழ் தாசன், விழுப் புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்தனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ பேசுகையில்:

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற 4 ஆண்டு காலத்தில்சொன்ன திட்டங்களையும் சொல்லாத திட்டங்களையும் இரவு பகல் பாராமல் செய்து வருகிறார் ஆனால் பிரதமர் மோடி அவர்கள் தேர்தலில் சொன்ன வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாமல் உள்ளார் வெளிநாட்டில் பதுக்கி உள்ளபணத்தை மீட்பு இந்தியாவில் உள்ள ஏழை மக்களின் வங்கி கணக்கில்15 லட்சம் செலுத்துவேன் என்று கூறினார் இதுவரை செலுத்தவில்லை இந்தியாவில் உள்ள ஏழை எளிய மக்களைநம்ப வைத்து ஏமாற்றியவர் பிரதமர் மோடி.100 நாள் வேலைத்திட்டத்தில் தற்போது ஊதியம் பெறுவது பெரும் சிரமமாக உள்ளது. மேலும் 100 நாள் வேலை திட்டத்தில் 20,25,30,40,50 நாட்கள்தான் கிராமத்தில் உள்ள மக்களுக்கு வேலை கிடைக்கிறது.பிரதமர் மோடி ஆட்சியில்பெரும் பணக்காரர்களுக்கு தான் ஆட்சி நடக்கிறது.இதே போல் மும்மொழி கொள்கை மூலம் தமிழ்நாட்டில் இந்தியை திணைக்க நினைக்கின்றனர். இதனால் தமிழ்நாட்டுக்கு கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய நிதியை தர மறுக்கின்றனர்.பிற மாநிலத்தில் இந்தி பேசுபவர்கள் தமிழ்நாட்டில் வேலை செய்து வருகின்றனர் ஆனால்தமிழ்நாட்டில் இரு மொழிக் கொள்கை மூலம்படித்தவர்கள் பல்வேறு நாடுகளில் உயர்பதவியில் பணியாற்றி வருகின்றனர்.இந்தியா முழுவதும் சொந்த வீடு இல்லாமல் உன்ன உணவு, உடை இல்லாமல் 10 கோடி பேர் உள்ளனர் .

ஆனால் ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம் என்ற வகையில் ஏழையின் சிரிப்பில் முதலமைச்சர் ஆட்சி செய்து வருகிறார். ரேஷன் கடையில் விலையில்லா அரிசி, வேட்டி, சேலை, உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.விமானம் மற்றும் சொகுசு ரயில் மூலம் பயண கட்டணம் ஒன்றிய அரசு உயர்த்தி உள்ளது ஆனால் இதுவரை தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் முதல்வர் பேருந்து கட்டணத்தை கூட உயர்த்தவில்லை மேலும் சொகுசு ரயில் மூலமாக ஏழைகள் பயன்படுத்தும் ரயில் பெட்டிகள் எண்ணிக்கை ஒன்றிய அரசு குறைத்துள்ளது. அந்த வகையில் ஏழை எளிய மக்களை வஞ்சிக்கின்ற ஆட்சி மத்தியில் நடைபெற்றுவருவதாக விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் குற்ற ம் சாட்டினார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சிசிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட துணை செயலாளர் அருணகிரி, பொதுக்குழு உறுப்பினர் வீடூர்ரவி, ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், மயிலம் மத்திய ஒன்றிய செயலாளர் செழியன், மாவட்ட கவுன்சிலர்கள் மகேஸ்வரி குமரேசன், விஜயன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ரகுபதி, சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் அன்சாரி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் செந்தில்குமார்,முன்னாள் துணை சேர்மன் ஜெயபாலன், ஒன்றிய நிர்வாகிகள் சேகர், சண்முகம், ஆனந்தன், சித்ரா ஏழுமலை, ஆனந்தவேல், சேகர், சிவானந்தம், ஞானசேகர், இளைஞர் அணி நிர்வாகிகள் மணிகண்டன், கேசவன், தினேஷ், சிலம்பரசன்உள்ளிட்ட ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ் நன்றி கூறினார்.




விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ரெட்டனை அண்ணா திடலில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 72வதுபிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் தலைமை தீர்மானக் குழு தலைவரும் கழகப் பேச்சாளருமான தமிழ் தாசன்சிறப்புரையாற்றினார்.தொடர்ந்து முதலமைச்சரின் பிறந்தநாளை முன்னிட்டு ஆயிரம் நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் வழிகாட்டுதலின்படி, மார்ச் 1 தமிழக முதல்வர், கழகத் தலைவர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சங்கராபுரம் வடக்கு ஒன்றியம் இராவுத்தநல்லூர் ஊராட்சியில் ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் பி.என்.ஆர்.அசோக்குமார் தலைமையில் கழக இரு வண்ணக் கொடி ஏற்றி, கேக் வெட்டி, இனிப்புகள் அன்னதானங்கள் வழங்கி, இந்தி திணிப்புக்கு எதிராக பல்வேறு கண்டன கோஷங்கள் எழுப்பி உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர், இதில் ஒன்றிய குழு துணை தலைவர் அஞ்சலை கோவிந்தராஜ், மாவட்ட கவுன்சிலர் அஸ்வினி செந்தில்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் விசய் ஆனந்த், ஒன்றிய நிர்வாகி பிச்சை பிள்ளை, பாரூக், நல்லதம்பி, கிளைக் கழக செயலாளர்கள் அரசு, ஜெகதீஷ், பிரகலாதன், ஊராட்சி மன்ற தலைவர் சரண்யா கதிரவன், ஒன்றிய குழு உறுப்பினர் பரிமளா பிரபு, இளைஞரணி அமைப்பாளர்கள் சந்துரு, தக்ஷிணாமூர்த்தி, வெங்கடேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்ட தி,மு,க, இளைஞரணி சார்பில் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி கடலாடி பேருந்து நிலையம் முன்பு அமைந்துள்ள அண்ணா திடலில் இந்தித் திணிப்பு, நிதிபகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, தலைமையிலும் பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத்ராஜா வரவேற்புரையாற்றினார், இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தலைமைக் கழகப் பேச்சாளர் கம்பம் செல்வேந்திரன் மற்றும் முகமது அஸ்வத் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர். ஏ.என்.இன்பா ராகு, பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச. சார்பில்

# கழகத் தலைவர் - முதல்வர் பிறந்த நாளையொட்டி நலஉதவிகள்!

## பா.மணிமாறன் – நிர்வாகிகள் வழங்கினர்!

சென்னை, மார்ச் 7 -

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பாக தமிழ்நாடு முழுவதும் திராவிட மாடல் முதலமைச்சர் - தளபதி அவர்களின் பிறந்த நாளையொட்டி நலஉதவிகள் வழங்கப்பட்டன.

இதுகுறித்து மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க பொதுச்செயலாளர் பா. மணிமாறன் அறிக்கை வருமாறு :-

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்கள் மற்றும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் என 2 இலட்சம் நபர்களின் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்திய முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏழை, எளியோர்களுக்கு, நலத் திட்ட உதவிகள், அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு முழுவதும் மின்கழகத்தொமுச சார்பாக நடைபெற்றது.

மார்ச்1 தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கும், திராவிட மாடல் முதலமைச்சர் அன்புத் தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அண்ணா சாலையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்களுக்கு மற்றும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் உள்ள தூய்மை பணியாளர்கள், காவல் பணியாளர்கள், சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், பொதுமக்கள் என 300 நபர்களுக்கு ரூ.1500/ மதிப்புள்ள சமையலுக்கு தேவையான தரமான அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு பைகளில் நல உதவிகள் வழங்கப்பட்டது. மதியம் சுமார் 500 பேர்களுக்கு சுவையான அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

2021ம் ஆண்டு, மே மாதம் 7ம் நாள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பு ஏற்று கழகத்தலைவர் அன்புத்தளபதி அவர்கள், அப்போது நம்மை சூழ்ந்திருந்த கொரானா நோயின் தாக்கத்திலிருந்து நம்மை காப்பாற்றினார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வு, பணிபுரிகிறவர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் பாதுகாப்பு வழங்கிய முத்தரப்பு ஒப்பந்தம், அகவிலைப்படி உயர்வு, கருணைத் தொகையுடன் போனஸ், அதிகாரிகளுக்கு பொங்கல்பரிசு, என எண்ணற்ற சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர செய்தார்கள்.

மகளிர்களுக்கு விடியல் பேருந்து பயணம், பள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், "இல்லம் தேடி கல்வித் திட்டம்", புதுமைப்பெண் திட்டம், முதல்வர் மருந்தகம், நான் முதல்வன் திட்டம், எல்லாவற்றிற்கும் மணிமகுடமா திகழும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், என பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

கடந்த அதிமுக ஆட்சியில், பொதுமக்கள் நலனில் சிறிதும் அக்கரையின்றி வீட்டுமனை பட்டா வழங்குவதை தவிர்த்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களை தமிழ்நாட்டில் 86000 ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு பட்டா அளித்து மகிழ்ச்சி அடையச்செய்து, தமிழ்நாட்டு அனைத்து பிரிவு மக்களின் நலன் பாதுகாக்கும் அரசு என நிருப்பித்துள்ளார். நமது முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்கள், என மின்கழகத்தொமுச பொதுச்செயலாளர் மணிமாறன் தொழிலாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநில துணைப்பொதுச்செயலாளர்கள்: கடலூர் கே.வேல்முருகன், சேலம் குமணிகண்டன், மாநில பொருளாளர் தே.மெய்ஞான மூர்த்தி, முதன்மைச்செயலாளர் தே.முரளிகுமார், வட்டாரச் செயலாளர் எம்.பாஸ்கரன், வெளியீட்டுச்செயலாளர் மு.சடாச்சரம், தலைமை அலுவலக முன்னாள் தலைவர் எ. எம்.சதீஷ்குமார்.

கடலூர் மின்பகிர்மான வட்டம்: கண்ணன், மாநில பிரச்சார செயலாளர், பி.மணி, திட்ட இணைச்செயலாளர், ஆர்.ஸ்ரீதர், கோட்ட அமைப்பு செயலாளர், பி.துளசிநாத், திட்ட அமைப்பு செயலாளர், கே.ரமேஷ், கிளைச்செயலாளர், எம்.கோபு, திட்ட அமைப்பு செயலாளர்.

சேலம் மின் திட்டம்: வே.நெடுஞ்செழியன், திட்டப்பொருளாளர், ச.பொன் செல் வம், திட்ட அமைப்புச் செயலாளர், வி.சரவணன், மேற்கு கோட்டச்செயலாளர்.

சென்னை தெற்கு I : கே.விநாயகமூர்த்தி, திட்டச் செயலாளர், ஆர்.தனசேகரன், துணைச்செயலாளர், சி.சிவகுமார், கிளைச்செயலாளர், பி.தனபால், கிளைச்செயலாளர்.

சென்னை மேற்கு திட்டம்: 1. பிரேம் ஆனந், திட்ட துணை செயலாளர், டி.சுகுமாறன், திட்டத்துணை செயலாளர், ஆவடி கோட்டச்செயலாளர், டி.ரஞ்சன்குமார், எம்.உதயகுமார், அமைப்புச்செயலாளர்.

சென்னை வடக்கு ஏ.பாபு ராஜ், கோட்டச்செயலாளர், பி.வி.எஸ்.ராஜன், டி.தேசிங்கு கோட்டத்தலைவர், பசுபதி, சுந்தர், நேதாஜி, பாபு ராமமூர்த்தி, மலைச்செல்வி.

தலைமை அலுவலகம் : எம். சிவகுமார், சுரேஷ், மோகன் ராஜ், தியாகு, ஆல்பர்ட், சிலம்பரசன், உதயா, மதி, தினேஷ்.

சென்னை நடுவண் : ராயபுரம் ராஜேந்திரன், திட்டச்சிறப்புத்தலைவர், தனசேகரன், திட்டத்தலைவர், முருகன், கோட்டச் செயலாளர் (எழும்பூர்), மகேஷ், அண்ணாசலை கோட்டம், ராஜ்குமார், அண்ணா சாலை கோட்டம்.

தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலகம் : பாலசுப்பிரமணி, தமிழரசி, மஞ்சுளா சத்தியநாராயணன், அன்பழகன், ரவி, சந்திரா.

செயலகக்கிளை : சாம்சன், ஜனாதன், விக்னேஷ்வரன், சுந்தர் ஆகியோர்கள் கலந்துக் கொண்டார்கள்.



தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச. சார்பில் கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு மின் வாரிய தலைமை அலுவலகத்தில் காவல் மற்றும் தூய்மை பணியாளர்கள் 500க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு மதிய உணவும் நல உதவிகளும் மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் மற்றும் நிர்வாகிகள் வழங்கினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கோ. இளங்கோவன்

**மார்ச் 7 (2015)**



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீதும் கழகத்தின்மீதும் தன் இறுதிமூச்சு வரை பற்று கொண்டிருந்தவர்.

உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்த இவர், மாநிலம் முழுவதும் தலைமைக் கழகப் பேச்சாளராக 'துறவி' எனும் புனைப் பெயருடன் கழகக் கொள்கையினை பரப்பியதுடன், மாவட்ட அவைத்தலைவர், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை கழகத்தில் வகித்தவர்.

1971, 1977 ஆகிய இரண்டு முறை நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக திருச்சி மத்திய சிறையில், ஓராண்டு காலம் நெருக்கடிகால "மிசா" கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**